## *2011, ஜூன்*

# தேர்தலுக்குப் பிந்தைய கள ஆய்வு முடிவுகள்

### ஆய்வகப் பின்னணி

*“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவது **மக்கள் ஆய்வகம்**. களஆய்வுகளோடு நின்று விடாமல், ஆய்வுமுடிவுகளை அடியொற்றிய செயல்பூர்வமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. தகவல் அறியும் உரிமை, வாக்குரிமை, உடல்தேய்வு நோய் விழிப்புணர்வு ஆகியவை குறித்து மாநில அளவிலான பரப்புரைப் பயணங்களையும், இந்தியத் தேர்தல் முறையில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்துத் தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களையும், புவி வெப்பமாதல் முதலிய சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்த பயிலரங்குகளையும் நடத்தியுள்ளது. ஆய்வுகளின் அடிப்படையில் கலைப்படைப்புக்களை உருவாக்கும் மற்றொரு முயற்சியாக, அரவாணிகளைப் பற்றிய “அப்பால்,” இளைஞரைப் பற்றிய “வர்ணா” ஆகிய குறுந்திரைப் படங்களையும், பிரச்சனைகளை மையப்படுத்திய பல ஆவணப்படங்களையும் தயாரித்துள்ளது.*

### ஆய்வு அணுகுமுறை

*தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் அதிமுக வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, மே 21 முதல் 29 வரையும், புதிய சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் முடிந்துள்ள நிலையில், ஜூன் 11 முதல் 15 வரையும், அதிமுக ஆட்சியின் “தேனிலவுக் கால”ச் செயல்பாடுகளைக் குறித்த மக்களின் கருத்துப்போக்குகளை ஆராய, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 3132 பேரைச் சந்தித்துக் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன (தனிப்பட்ட கலந்துரையாடலில் 2232 பேர், விடியோ பதிவில் 900 பேர்). மீனவர் பிரச்சனைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் ஏறத்தாழ 21 விழுக்காடு (650 பேர்) கடற்கரையோரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சந்திக்கப்பட்டனர். ஏறத்தாழச் சம அளவில் ஆண்களும் பெண்களும் களஆய்வில் பங்கேற்றனர்.*

*தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (*quantitative*) மற்றும் பண்பியல் (*qualitative*) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் உருவாக்கியுள்ள சமூக-உளவியல் அணுகுமுறை (*social-psychological approach*) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.*

### பங்கேற்றோர் பின்னணி

*களஆய்வில் பங்கேற்றோரில், வயதுரீதியாக, வயது 18க்கு மேல் 20 வயது வரை - 3.5, வயது 21 முதல் 30 வரை - 27.4, வயது 31 முதல் 45 வரை 39.4, வயது 46 முதல் 60 வரை - 25.4, மீதி - வயது 61-க்கு மேல். கல்வியைப் பொருத்த மட்டில், பெரும்பாலோர் (57.9) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள். மற்றவர்களில், உயர்கல்வி - 19.7, வகுப்பு 5 வரை - 13.6, மீதி - படிக்காதவர்கள் / சொல்ல விரும்பாதோர்.*

*தொழில்ரீதியாக, பெரும்பாலோர் (54.9) சொந்தத் தொழில் செய்பவர்கள். மற்றவர்களில், விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் - 17.1, தனியார் நிறுவன ஊழியர் - 15.0, அரசு ஊழியர் - 5.7, மாணவர் - 3.7, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்.*

*சாதிரீதியாக, தாழ்த்தப்பட்டோர் - 20.7, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 24.6, பிற்படுத்தப்பட்டோர் - 50.4 (மீதி - பிற இனத்தினர் / சொல்ல விரும்பாதோர்). மதரீதியாக, இந்து மதத்தினர் - 82.3, கிறிஸ்தவர் - 8.9, இஸ்லாமியர் - 8.7 (மீதி - பிற மதத்தினர் / சொல்ல விரும்பாதோர்).*

### தேர்தல் முடிவுகள்

### *(1) முடிவுகள் குறித்த எதிர்பார்ப்பு:*

*நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அதிமுக அணி வெற்றி பெறும் என்பது தாங்கள் எதிர்பார்த்ததே என மிகப் பெரும்பாலோர் (74.8) தெரிவித்தாலும், அவர்களில் கணிசமானோர் (21.1) இந்த அளவுக்கு மாபெரும் வெற்றியாக அமையுமென எதிர்பார்க்கவில்லை எனக் கூறுகின்றனர். தேர்தல் முடிவுகள் முற்றிலும் எதிர்பாராத வகையில் அமைந்திருப்பதாக நான்கில் ஒரு பங்கினர் (25.2) தங்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.*

### *(2) வெற்றிக்குக் காரணங்கள்:*

***(அ) அதிமுக அணியின் வெற்றி:*** *அதிமுக அணியின் மகத்தான வெற்றிக்குக் காரணங்களாக மக்கள் சொல்லியுள்ளவற்றில் முதல் ஐந்து: ஆட்சி மாற்றம் வேண்டி (44.2), திமுக தலைமையின் குடும்ப ஆட்சி (32.1), விலைவாசி உயர்வு (28.7), மின்வெட்டு (25.8), அரசுத் துறைகளில் லஞ்சம் - ஊழல் (22.9).*

***(ஆ) தேமுதிக-வின் வெற்றி:*** *அதிமுக அணியில் தலையாய அங்கமாகிய தேமுதிக-வைப் பொருத்தவரையில், அக் கட்சியின் வெற்றிக்கான முக்கிய காரணமாக, அதிமுக-வுடன் கூட்டணி வைத்தது பெரும்பாலோரால் (52.8) குறிப்பிடப்படுகிறது. பிற முக்கியக் காரணங்கள்: ஆட்சி மாற்றம் வேண்டி - 23.1, விஜயகாந்த் மீது நம்பிக்கை - 21.9.*

### *(3) தோல்விக்குக் காரணங்கள்:*

***(அ) திமுக அணியின் தோல்வி:*** *திமுக அணியைப் பொருத்தவரை, அதன் படுதோல்விக்குக் காரணங்களாக மக்கள் முன்வைத்துள்ளவற்றில் முதல் ஐந்து: திமுக தலைமையின் குடும்ப ஆட்சி (49.7), அரசுத் துறைகளில் லஞ்சம் - ஊழல் (42.9), 2பு ஸ்பெக்ட்ரம் முறைகேடு (31.5), மின்வெட்டு (27.8), விலைவாசி உயர்வு (20.7).*

***(ஆ) காங்கிரஸின் தோல்வி:*** *திமுக அணியில் மிகப்பெரிய அங்கமாகிய காங்கிரஸைப் பொருத்த வரையில், ஈழத் தமிழர் பிரச்சனையில் அக் கட்சி போட்டுவரும் இரட்டை வேடம் அதன் படு தோல்விக்கு மிக முக்கிய காரணமாக மிகப் பெரும்பாலோரால் (61.5) முன்வைக்கப்படுகிறது. அடுத்து இடம் பெறும் முக்கிய காரணங்கள்: உள்கட்சிப் பிரச்சனை - 20.3, திமுக-வுடன் கூட்டணி - 11.7.*

***(இ) திமுக-காங்கிரஸ் உறவு:*** *தற்போதைய அரசியல் சூழலில், திமுக-காங்கிரஸ் உறவு தொடருமா என்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களில் சந்தேகத் தொனியே தூக்கலாக வெளிப்படுகிறது.*

| | |
|---|---|
| *நிச்சயமாகத் தொடரும்* | *- 17.5* |
| *உறவு தொடரும், ஆனால் ஆட்சியில் திமுக பங்கேற்காமல் வெளியிலிருந்து மத்திய அரசுக்கு ஆதரவு தரும்* | *- 14.2* |
| *பெயரளவில் உறவு தொடர்வதாகச் சொன்னாலும் கடுமையான விரிசல் ஏற்பட்டுள்ளது உண்மை* | *- 23.3* |
| *இனி உறவு தொடர வாய்ப்பில்லை விரைவிலேயே உறவு முறிந்துவிடும்* | *- 36.7* |

## அதிமுக ஆட்சியின் "தேனிலவு"

*(ஆட்சிப் பொறுப்பேற்றது தொடங்கி, முதல் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியும் வரை)*

### *(4) தலைமைச் செயலகத்திற்கான புதிய கட்டிடம்:*

***(அ) கைவிடும் முடிவு:*** *தலைமைச் செயலகத்திற்கான புதிய கட்டிடத்தைக் கைவிட எடுத்துள்ள முடிவுக்கு எதிர்ப்பை விட இருமடங்கிற்கும் மேலான ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

***ஆதரவு - 66.1*** *(இது அதிமுக தேர்தல் அறிக்கையிலேயே சொல்லப்பட்ட விஷயம் தான் - 29.3, புதிய கட்டிடத்தில் தமிழ் பண்பாட்டு / அழகியல் அம்சங்கள் இல்லை - 17.3, மிக நெரிசலான இடத்தில் அமைந்துள்ளது - 11.0, கட்டிட வேலை முடியவில்லை - 8.5).*

***எதிர்ப்பு - 32.3*** *(வேண்டுமானால் சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாமே தவிர, முற்றிலும் கைவிடுவதால் அரசுக்குப் பேரிழப்பு - 20.2, ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை - 12.1).*

***(ஆ) விசாரணைக் குழு:*** *தலைமைச் செயலகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கருதி, விசாரணைக் குழு அமைக்க முடிவுசெய்துள்ளது சரியானதெனப் பாதிப் பேர் (49.2) வரவேற்றாலும், நான்கில் ஒருவர் (25.3) இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று கருதுகின்றனர். கட்டுமானப் பணிகளை முடக்கிவைப்பதால் செலவு இன்னும் அதிகமாகும் என்பதால் இந்த விசாரணைக் குழு தேவையற்றது*

என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க (18.2) பதில்.

### (5) சமச்சீர் கல்வித் திட்டம்:

***(அ) ரத்துசெய்யும் சட்டத்திருத்தம்:*** சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்துசெய்து சட்டத்திருத்தம் நிறைவேற்றியுள்ளதற்கு ஆதரவை விட எதிர்ப்பே அதிகமாய்ப் பதிவாகியுள்ளது.

***ஆதரவு - 35.5*** (பாடத்திட்டம் செம்மையாகத் திட்டமிடப்படாததால் ஓராண்டு ஒத்திவைப்பதில் தவறில்லை - 22.1, திமுக கட்சி / தலைவர்களைப் புகழ்ந்து திணித்துள்ள பாடங்களை மாற்ற அவகாசம் தேவை - 11.7, சமச்சீர் கல்விக் கொள்கையே தவறு, பாடத்திட்டத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோருக்குத் தரப்படவேண்டும் - 1.7).

***எதிர்ப்பு - 62.3*** (இது சமூகநீதிக்கு எதிரான முடிவு, தனியார் மெட்ரிக் பள்ளி முதலாளிகளின் நிர்ப்பந்தத்திற்கு அரசு பணிந்து விட்டது - 31.8, நடைமுறைப்படுத்தும்போதுதான் அதிலுள்ள குறைநிறைகள் தெரியும் என்பதால் இந்த ஆண்டே நடைமுறைப்படுத்தி, அந்த அனுபவத்தின் பின்னணியில் அடுத்த ஆண்டு திருத்தம் செய்துகொள்ளலாம் - 9.6, ஏற்கெனவே பாடநூல்கள் அச்சிடப்பட்டு விட்டதால் அரசுக்கு இழப்பு - 5.4, ஆட்சி மாறும்போது முந்தைய அரசு நிறைவேற்றிய சட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை - 15.5).

***(ஆ) உயர்நீதிமன்றத் தீர்ப்பு:*** சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்துசெய்ததற்குத் தடை விதித்த உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்புள்ளது. இது மிகச் சரியான தீர்ப்பு என்றும், காலதாமதம் செய்யாமல் சமச்சீர் கல்வியை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கினர் (74.7) தெரிவிக்கின்றனர்.

அதிமுக அரசுக்கு இந்தத் தீர்ப்பு ஏற்கத்தக்கதாக இல்லாவிட்டாலும், மேல் முறையீடு செய்து மேலும் தாமதமாக்காமல், மாணவர் நலன் கருதி சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் கணிசமானோர் (14.5) தெரிவிக்கின்றனர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவேண்டும் என மிகச் சிலரே (7.6) கருதுகின்றனர்.

### (6) கல்விக் கட்டணக் குளறுபடிகள்:

தனியார் / மெட்ரிக் பள்ளிகளில் கல்விக் கட்டணம் குறித்த பிரச்சனையை ரவிராஜ பாண்டியன் குழு சுமுகமாகத் தீர்க்கும் என்ற நம்பிக்கையைப் பத்தில் ஒருவர் மட்டுமே (10.4) வெளிப்படுத்தி யுள்ளனர்.

அதிகக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பது (32.9), அத்தகைய பள்ளிகளைப் பெற்றோர் புறக்கணிப்பது (23.8) ஆகியவை இப் பிரச்சனைக்கான முக்கிய தீர்வுகளாகச் சொல்லப்படுகின்றன. பள்ளிகளில் உள்ள வசதிகளுக்கேற்ப அந்தந்த நிர்வாகமே கட்டணம் நிர்ணயித்துக்கொள்ள விட்டுவிட வேண்டும், அரசு தலையிடக் கூடாது என்ற கருத்துக்கும் குறிப்பிடத் தக்க (17.8) ஆதரவுள்ளது.

திமுக அரசும் சரி, அதிமுக அரசும் சரி, கட்டண விஷயத்தில் உறுதியான நிலைப்பாடு எடுக்காதது பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளிக்கிறது என்பது கவனிக்கத்தக்க (12.2) மற்றொரு பதில்.

### (7) அண்ணா பல்கலைக் கழகம்:

அண்ணா பல்கலைக் கழகங்களை மீண்டும் ஒரே பல்கலைக்கழகமாக மாற்றும் அதிமுக அரசின் முடிவுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தாலும், மிகக் கணிசமான அளவினருக்கு (29.5) இது குறித்துக் கருத்துரைக்கும் அளவுக்கு ஆர்வமில்லை என்பது கவனத்திற்குரியது.

***ஆதரவு - 46.3*** (இதனால் திறமையான நிர்வாகம் / தரக் கட்டுப்பாடு சாத்தியமாகும் - 37.5, தரமற்ற கல்லூரிகளுக்கு அனுமதி ஜயககடையைவழைஸெ வழங்குவது தடுக்கப்படும் - 8.8).

***எதிர்ப்பு - 17.1*** (அதிகாரம் பரவலாக இருப்பதுதான் சிறப்பான நிர்வாகத்தின் அடிப்படை - 7.1, ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை - 10).

அரசு எத்தகைய முடிவெடுத்தாலும், மாணவர் சேர்க்கையின்போது மாணவர்கள் அலைக்கழிக்கப் படாமல் இருந்தால் போதும் என்ற பதிலையும் சிலர் (7.1) தெரிவித்துள்ளனர்.

### (8) திருமண உதவி:

பெண்களுக்குத் திருமண உதவித்தொகை அதிகரிப்பு மற்றும் தாலிக்குத் தங்கம் தரும் திட்டத்திற்கு ***ஏகோபித்த வரவேற்பு (80.3)*** உள்ளது. எனினும், இவர்களில் நிபந்தனையற்ற வரவேற்பு வழங்குவோர் 39.4 மட்டுமே. ஏனையோர் (40.9) படித்த பெண்கள் - படிக்காத பெண்கள் என்று பாகுபடுத்தாமல் எல்லாருக்கும் ஒரே மாதிரி உதவி செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றனர்.

ஏற்கெனவே கல்லூரியில் படிக்கிற அளவு வசதியுள்ள பெண்களுக்கு இந்த உதவி அவசியமற்றது என்ற கருத்தையும் பத்தில் ஒருவர் (10.0) தெரிவிக்கின்றனர். இந்தத் திட்டத்தை வெகு சிலரே (6.5) வீண் செலவாகக் கருதுகின்றனர்.

### *(9) முதியோர் உதவித் தொகை:*

முதியோர் உதவித் தொகை அதிகரிப்பு மற்றும் வங்கி வழியாகப் பட்டுவாடா செய்யும் திட்டத்திற்கு ***அபரிமிதமான வரவேற்பு (85.8)*** உள்ளது (எந்த நிபந்தனையும் இல்லாமல் ஆதரவு - 67.9, வங்கி மூலம் பட்டுவாடா செய்யும்போது அப்பாவி கிராம மக்களை வங்கி ஊழியர்கள் அலைக்கழிக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் - 17.9).

முதியோர் உதவித் தொகைக்குப் பதில், பெற்றோரைப் பிள்ளைகள் காப்பாற்றாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் (6.7), இந்தத் திட்டம் வீண் செலவு என்பதால் இதைக் கைவிடவேண்டும் (5.8) ஆகியவை சிறுபான்மை விமர்சனங்கள்.

### *(10) மிக்ஸி-கிரைண்டர்-விசிறி:*

மிக்ஸி-கிரைண்டர்-விசிறி இலவசமாய் வழங்கும் திட்டத்திற்குப் ***பரவலான ஆதரவு (54.4)*** இருந்தாலும், மூன்றில் ஒரு பங்கினர் மட்டும் (33.1) நிபந்தனையற்ற ஆதரவு தருகின்றனர். "மெயின்டனன்ஸ்" பிரச்சனையைச் சமாளிக்க வழிசெய்யாவிட்டால், இந்தத் திட்டம் தோல்வியில்தான் முடியும் என்ற கருத்தும் வலுவாக (21.3) முன்வைக்கப்படுகிறது.

இதனால் மக்களுக்குப் பெரிய அளவில் பயனேதுமில்லை, உற்பத்தியாளருக்குத்தான் லாபம் (20.8), இந்தத் திட்டத்தைக் கைவிட்டு, வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு அப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும் (23.5) ஆகிய விமர்சனங்களும் மிக அழுத்தமாக முன்வைக்கப்படுகின்றன.

### *(11) இலவச அரிசி:*

இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்கு ***மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் ஆதரவு (67.5)*** வெளிப்படுகிறது (நிபந்தனையற்ற வரவேற்பு - 57.9, ரேஷன் கடை ஊழியர்கள் தில்லுமுல்லு செய்ய வாய்ப்புள்ளதால் அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் வரவேற்பு - 9.6).

இது மக்களைச் சோம்பேறிகளாக்கும் திட்டம் (18.8), ஆண்கள் இன்னும் அதிகமாகப் பொறுப்பற்றவர்களாகவும் குடிகாரர்களாவும் மாற வழிவகுக்கும் (11.3) ஆகிய காரணங்களால் இத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

### *(12) இலவச லேப்-டாப்:*

பிளஸ்-டு தொடங்கி பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்-டாப் வழங்கும் திட்டத்திற்குப் ***பெருவாரியான வரவேற்பு (84.7)*** உள்ளது. எனினும், அரசு பள்ளியில் / கல்லூரியில் படிக்கின்ற ஏழை மாணவருக்கு மட்டும் தரலாம் என்ற கருத்து முதன்மையிடம் (39.8) பெறுகிறது. நிபந்தனை ஏதுமின்றி அப்படியே அமுல்படுத்தலாம் என்ற கருத்தும் ஏறத்தாழச் சம வலுவுடன் (38.2) வெளிப்படுகிறது. பள்ளி மாணவர்கள் கெட்டுப்போக வாய்ப்பு அதிகம் (இன்டர்நெட், சிடி, வீடியோ கேம்) என்பதால், கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் தரலாம் (6.7) என்பது மற்றொரு பரிந்துரை.

இதனால் மாணவர்களுக்குப் பெரிய அளவில் பயனேதுமில்லை, உற்பத்தியாளர்களுக்குத்தான் லாபம் (5.8), இதனால் நன்மைகளை விட தீமைகளே அதிகம் என்பதால் இதை மறுபரிசீலனை செய்வது நல்லது (2.5), இதற்கு ஆகும் தொகையை மாணவர்களுக்குப் பயன்தரும் வேறு நல்ல திட்டங்களுக்கு ஒதுக்கலாம் (5.0) ஆகியவை இத் திட்டத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள்.

### *(13) கைவிடப்படும் காப்பீட்டுத் திட்டம்:*

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைக் கைவிட்டு, புதிய காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்யும் அரசின் முடிவுக்கு ***ஒருமித்த கருத்து எதுவும் வெளிப்படவில்லை.***

தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும் எந்தவொரு காப்பீட்டுத் திட்டத்திற்கும் பதிலாக, அந்தப் பணத்தைக் கொண்டு அரசு மருத்துவமனைகள் / ஆரம்ப சுகாதார நிலையங்களை நவீனப்படுத்த வேண்டும் என்ற கருத்தே முதலிடம் (30.4) பெறுகிறது.

அதிமுக அரசு முன்வைக்கும் திட்டம் பெரிதாக வேறுபடவில்லை என்பதால், பழைய திட்டத்தின் பெயர் நெருடலாக இருந்தால் அந்தப் பெயரை மாற்றிவிட்டு பழைய திட்டத்தையே தொடரலாம் என்ற கருத்தை நான்கில் ஒருவரும் (24.6), அதற்குச் சற்றுக் குறைவான அளவினர் (22.5) திமுக அரசின் காப்பீட்டுத் திட்டம் முறையாகக் கலந்தாலோசித்து உருவாக்கப்படவில்லை என்பதால் அதைக் கைவிடுவது சரி என்ற கருத்தையும் முன்வைக்கின்றனர்.

ஒவ்வொரு முறை ஆட்சி மாறும்போதும் முந்தைய அரசின் திட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை என்பது ஐந்தில் ஒருவரது (20.4) கருத்து.

***(14) கைவிடப்படும் கான்கிரீட் வீடு திட்டம்:***

திமுக அரசின் கலைஞர் கான்கிரீட் வீடு கட்டும் திட்டம் முறையாகக் கலந்தாலோசித்து உருவாக்கப்படவில்லை என்பதால் அதைக் கைவிட நான்கில் ஒருவரது (24.3) ஆதரவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்ததாக (சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவது உள்பட) இருப்பதால் புதிய திட்டத்திற்கு பத்தில் ஒருவரது ஆதரவும் (9.8) உள்ளன.

எனினும், இந்த விஷயத்தில் அவசரப்படாமல், தீர ஆராய்ந்து புதிய திட்டத்தை வடிவமைக்க வேண்டும் என்பதே பெரும்பான்மைக் கருத்தாக (43.7) வெளிப்படுகிறது.

பழைய திட்டத்தின் பெயர் நெருடலாக இருந்தால் அதை வேண்டுமானால் மாற்றிவிட்டு பழைய திட்டத்தையே தொடரலாம் (12.5), ஆட்சி மாறும்போதெல்லாம் முந்தைய அரசின் திட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை (8.2) ஆகியவை பிற முக்கியமான பதில்கள்.

***(15) இலவச டி.வி. திட்டம் ரத்து:***

இலவச டி.வி. திட்டத்தை ரத்து செய்து, மீதமுள்ள ஒன்றேகால் லட்சத்திற்கும் மேற்பட்ட பெட்டிகளை அநாதை இல்லங்கள் முதலிய பொது/தொண்டு அமைப்புகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளது சரியானதென மூன்றில் ஒருவர் (34.2) வரவேற்புத் தெரிவிக்கின்றனர்.

எனினும், பெரும்பாலான குடும்பங்களுக்கு கடந்த ஆட்சியிலேயே டி.வி. வழங்கப்பட்டுவிட்ட நிலையில், மீதமுள்ள குடும்பங்களை ஏமாற்றாமல் அவர்களுக்கும் வழங்குவதுதான் நியாயமானது என்பது பெரும்பான்மைக் கருத்தாக (47.1) வெளிப்படுகிறது. கடந்த ஆட்சியிலேயே டி.வி. பெட்டிகளை விலைக்கு வாங்கி விட்டதால், புதிய அரசுக்கு எந்தச் செலவும் வைக்காத இந்தத் திட்டத்தை ரத்து செய்வது அர்த்தமற்றது என்பது சற்று வலுவாக (16.7) வெளிப்படும் மற்றொரு விமர்சனம்.

***(16) கேபிள் டிவி அரசுடைமை:***

கேபிள் டிவி-யை அரசுடைமை ஆக்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த ***உச்சபட்ச வரவேற்பு (91.3)*** உள்ளது (குறைந்த கட்டணத்தில் அனைத்து வீடுகளுக்கும் இணைப்பு வழங்குவது - 41.0, வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாய் வழங்குவது - 50.3).

இந்தத் திட்டத்திற்கு எதிராக மிகச் சன்னமாக ஒலிக்கும் விமர்சனங்களில் குறிப்பிடத்தகுந்தவை: சன் டிவி ஆதிக்கத்துக்குப் பதில் ஜெயா டிவி ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகும் - 4.1, கேபிள் டிவி-யை நெறிப்படுத்துவதுதான் அரசின் வேலையே தவிர, கேபிள் டிவி நடத்துவது அல்ல - 3.2.

***(17) டாஸ்மாக் விற்பனை நேரம்:***

டாஸ்மாக் கடைகளில் விற்பனை நேரத்தை அதிகரிக்கும் முடிவுக்குக் ***கடுமையான எதிர்ப்பு*** பதிவாகியுள்ளது ***(73.8)*** . குடிகாரர்களின் தொல்லை அதிகமாகும் (51.7), நலத்திட்டங்களைக் காரணம் காட்டி மது விற்கும் தவறைச் செய்யாமல், வருமானத்தைப் பெருக்க மாற்று வழிகளை அரசு ஆராய வேண்டும் (12.1), படிப்படியாக மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமே தவிர, மதுப் பழக்கத்தை அரசே ஊக்குவிக்கக் கூடாது (10.0) ஆகியவை எதிர்ப்பிற்கான காரணங்கள்.

கூடுதல் நேரம் கடை திறந்திருந்தால் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்பதால் இதற்கு ஆதரவு தெரிவிப்போர் நான்கில் ஒருவர் மட்டுமே (25.1).

***(18) மேலவை ஒழிப்பு:***

மேலவை அமைக்க முந்தைய அரசு நிறைவேற்றிய தீர்மானத்தைத் திரும்பப்பெறும் அரசின் முடிவுக்கு ஓரளவு வரவேற்பு இருந்தாலும், இது குறித்துக் கருத்துரைக்கும் ஆர்வமில்லாதோர் கணிசமாக (28.7) இருப்பதும் கருதத்தக்கது.

***சரியான முடிவு - 46.7*** (அரசுக்குச் செலவு மிச்சம் - 24.6, MLA-க்களுக்குப் போட்டியாக MLC-க்கள் அரசியல் அதிகாரம் செய்வது நிற்கும் - 17.5, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடுயு-க்கள் இருக்கையில் இப்படியொரு அமைப்புக்கு கொள்கை அளவிலான தேவையில்லை - 4.6).

***தவறான முடிவு - 24.6*** (அரசின் செயல்பாடுகளைக் கண்காணிக்க இப்படியொரு அமைப்பு இருப்பது நல்லது - 11.3, ஆட்சி மாறும்போது முந்தைய அரசு நிறைவேற்றிய சட்டங்களையும் மாற்றுவது தவறான அணுகுமுறை - 13.3).

***(19) புதிய அமைச்சரவையின் செயல்திறன்:***

அதிமுக அமைச்சரவையின் செயல்திறனுக்குப் ***பரவலான பாராட்டு (72.9)*** கிடைத்துள்ளது (அமைச்சர்களின் செயல்பாடுகள் இதுவரை மிகச் சிறப்பாக அமைந்துள்ளன, இனிமேலும் நன்றாகச்

செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - 37.1, இதுவரை பரவாயில்லை, ஆனால் நிறைய புதுமுகங்கள் இருப்பதால், இவர்களின் திறமை என்ன என்பது போகப் போகத்தான் தெரியும் - 35.8).

அதிமுக-வைப் பொருத்த வரையில் முதல்வர் ஜெயலலிதாதான் எல்லாம் என்பதால், அமைச்சரவையின் திறம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்ற விமர்சனமும் மிக அழுத்தமாக (26.3) பதிவாகியுள்ளது.

### (20) ஒன்றரை ஆண்டு காலக்கெடு:

முதல்வர் சொல்லியுள்ளது போல, அதிமுக-வின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் ஒன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றிவிட முடியுமா என்ற கேள்விக்கு, ஜெயலலிதா மனது வைத்தால் நிச்சயம் முடியும் என்ற பதில் முதலிடம் பெறுகிறது (54.5).

ஒன்றரை ஆண்டுகளில் எல்லாவற்றையும் இல்லாவிட்டாலும் பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் (16.5), ஒருசில வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்ற முடியும் (14.1) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் வருகின்றன.

சும்மா ஆரம்பத்தில் பாவலா காட்டிவிட்டு, பிறகு ஏதாவது சாக்குபோக்குச் சொல்லி எதையுமே நிறைவேற்றாமல் விட்டுவிடுவார்கள் என்ற பதிலையும் கணிசமானோர் (13.2) தெரிவித்துள்ளனர்.

### (21) தமிழக மீனவர் பிரச்சனை:

***(அ) கச்சத் தீவை மீட்கக் கோரும் தீர்மானம்:*** கச்சத் தீவை மீட்கக்கோரும் வழக்கில் தமிழக அரசும் இணைந்துகொள்ளச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பெரும்பாலோர் (62.9) வரவேற்றுள்ளனர்.

கச்சத் தீவை மீட்பதால் மட்டும் மீனவர் பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை (22.0), இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மத்திய அரசு மாற்றிக்கொள்ளாமல் இத்தகைய தீர்மானங்களால் எந்தப் பயனும் இல்லை (12.6) ஆகியவை குறிப்பிடத்தக்க மாற்றுக் கருத்துக்கள்.

***(ஆ) நிரந்தரத் தீர்வு:*** தமிழக மீனவர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாகப் பெரும்பாலோர் முன்வைப்பது கச்சத் தீவை மீட்பதாகும்.

| | |
|---|---|
| கச்சத் தீவை மீட்பது | - 45.8 |
| இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டுக்கு வருவது | - 25.0 |
| நமது கடற்படைப் பாதுகாப்பை வலுப்படுத்துவது | - 21.3 |
| மீனவர்கள் மாற்றுத் தொழில்களைக் கற்றுக்கொள்வது | - 2.5 |

### (22) இலங்கைத் தமிழர் பிரச்சனை:

***(அ) ஐ.நா. அறிக்கையை முன்வைத்த தீர்மானம்:*** இலங்கைப் பிரச்சனையில் ஐ.நா. அறிக்கையை முன்வைத்து இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்திச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு **ஏகோபித்த வரவேற்பு (81.5)** உள்ளது (இது சரியான நேரத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் - 58.8, இந்தத் தீர்மானத்தில் போர்க்குற்றவாளியாக ராஜபக்ஸே பெயரையும், நடந்தது "இனப் படுகொலை" ஜபநழெ-உனைநஸ என்பதையும் மழுப்பாமல் நேரடியாகக் குறிப்பிட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் - 22.7).

ராஜபக்ஸே அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு மாற்றிக்கொள்ளாமல் இத்தகைய தீர்மானங்களால் எந்தப் பயனும் இல்லை என்ற கசப்புணர்வும் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது (17.5) கவனிக்கத்தக்கது.

***(ஆ) தமிழகம் மேற்கொண்டு செய்ய வேண்டியது:***

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தமிழக அரசு / அரசியல் கட்சிகள் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு நான்கில் மூவர் (74.2) முன்வைக்கும் பதில்: மத்திய அரசுக்கு காலக்கெடு விதித்து, அதற்குள் நிறைவேற்றா விட்டால் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதாகும்.

மத்திய அரசை நம்பி, அதன் பொறுப்பில் விட்டுவிட வேண்டும் (14.4), தமிழக அரசோ அரசியல் கட்சிகளோ மேற்கொண்டு எதுவும் செய்யுமென்ற நம்பிக்கையில்லை (8.2) ஆகியவை பிற முக்கியப் பதில்கள்.

***(இ) மத்திய அரசு மேற்கொண்டு செய்ய வேண்டியது:*** இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாகத் தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைத் தொடர்ந்து மத்திய

அரசு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்குப் பதிவாகியுள்ள முதல் ஐந்து பதில்கள்:

| | |
|---|---|
| வரப்போகும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் ராஜபக்ஸேவை போர்க்குற்றவாளியாக அறிவித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் | - 69.8 |
| இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் | -42.3 |
| இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஐ.நா. அவையில் இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் | -40.5 |
| போரில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவும் சொத்துக்களைத் திரும்பப் பெறவும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் | -30.5 |
| இலங்கையுடனான தூதரக உறவை முறிக்க வேண்டும் | -12.1 |

***(ஈ) நிரந்தரத் தீர்வு:***

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு, தனி ஈழம் என்பது பெரும்பான்மைக் கருத்தாக வெளிப்படுகிறது.

| | |
|---|---|
| தனி ஈழம் | - 64.9 |
| பேச்சு வார்த்தை மூலம் சிங்களருக்கு நிகரான சமஉரிமைகளைப் பெறுவது | - 17.2 |
| ஒருங்கிணைந்த இலங்கையில் சட்டத் திருத்தம் மூலம் தமிழருக்குத் தன்னாட்சி | - 14.4 |
| சிங்களருக்கு அடங்கிப் போவது | - 2.3 |

## பிரச்சனைகளும் தீர்வும்

### *(23) தமிழகத்தின் முக்கியப் பிரச்சனைகள்:*

தற்போது தமிழகம் சந்திக்கும் முக்கியப் பிரச்சனைகளாக மக்கள் முன்வைப்பதில் முதல் ஐந்து இடங்களில் வருபவை: மின்வெட்டு (76.0), விலைவாசி உயர்வு (71.2), அரசுத் துறைகளில் லஞ்சம் - ஊழல் (16.4), வேலைவாய்ப்பின்மை (15.1), சட்டம்-ஒழுங்குச் சீர்குலைவு (12.8).

### *(24) அதிமுக அரசின் தீர்வு:*

தாங்கள் முக்கியமானவையாகக் கருதும் பிரச்சனைகளைப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அதிமுக அரசால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை பரவலாக வெளிப்படும் அதே வேளையில் தயக்கமும் இழையோடி நிற்கிறது: முழுமையாகத் தீர்க்க முடியும் - 27.1, ஓரளவு தீர்க்க முடியும் - 40.8. மிகச் சிறுபான்மையினரே (8.8) இப் பிரச்சனைகள் எதையும் தீர்க்க முடியாது எனக் கருதுகின்றனர். எதுவும் உறுதியாய்ச் சொல்வதற்கில்லை என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க (19.2) கருத்து.

**பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்**
**& குழுவினர்**
**மக்கள் ஆய்வகம்**
*18 ஜூன் 2011*

***கவனத்திற்கு:***

(1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.
(2) பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.
(3) வினா எண்கள் 2(அ), 3(அ), 22(இ), 23 ஆகியவற்றுக்கு ***இரண்டு*** முக்கியக் காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருப்பதால், பதில்களுக்கான விழுக்காடுகளின் மொத்தக் கூட்டுத் தொகை 200 வரை செல்லும்.

நன்றி

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்